மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

அமைச்சர்களின் இலாக்கா மாற்றம்—அவைக்கு அறிவித்தல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்று மாலை வானொலியிலும், இன்றைக்கு காலை செய்தித் தாள் மூலமும் தொழில் இலாக்காவும் அதேபோல கூட்டுறவு இலாக்காவும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமிருந்து மாற்றப் பட்டுள்ளதாக அறிந்தோம். இலாக்காக்கள் மாற்றப்படுவது முதல் அமைச்சர் அவர்களின் ப்ரோராகேட்டிவ் ரைட். அதை நாங்கள் நன்றாக அறிவோம். ஆனால் பட்ஜெட் தொடர் ஆரம்பித்திருக்கிற இந்த நேரத்தில் இப்படி நேர்ந்திருப்பதைப் போல ஒரு நிகழ்ச்சி இதுவரையில் தமிழக வரலாற்றிலே நடந்தது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கை சம்பந்தப் பட்ட விஷயம் அல்ல; இலாக்கா மாற்றங்கள் என்பது சர்வ சாதாரணமாக நடக்கக்கூடியதுதான்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அதையும் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபைக்கு அறிவிப்பது இல்லை. பார்லிமெண்டில் அப்படி நடப்பதில்லை.

திரு. ரா. உமாநாத்: அவை சம்பந்தப்பட்டது என்பதால்தான் நாங்கள் ரெய்ஸ் பண்ணுகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இங்கே இருப்பதால் இதுபோன்று ஒரு முக்கியமான இலாக்கா மாறுதல் செய்ததற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் மூலமாகவோ அல்லது அவை முன்னவர் அவர்கள் மூலமாகவோ அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தால் அவைக்கு அறிவிக்கலாம், அல்லது அமைச்சர்கள் இராஜினாமா செய்தால் இராஜினாமா செய்கிற அமைச்சர் அவர்கள் விருப்பப்பட்டால் ஒரு அறிக்கை வைக்கலாம். இலாக்கா மாற்றம் என்கிறபோது அவைக்கு அறிவிக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை.

1984 பிப்ரவரி 16]

திரு. என். எஸ். வி. சித்தன்: அமைச்சர் அவர்கள் இங்கு இருப்பதாலே பதில் சொல்ல வேண்டுமென்று கேட்கிறோம். காலையிலேயே அவர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இந்த மாறுதலைப் பற்றி சொன்னேன், நீங்கள் அப்போது வருவாய்த் துறை அமைச்சரோடு பேசிக்கொண்டிருந்தீர்கள். வினாக்கள் எண் 55,56,57—ஐ எடுத்துக் கொள்ளும் பொழுது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தொழில்துறை அமைச்சராக இலாக்கா மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே தொழில் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட வினாக்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத்: நான் இந்த இலாக்கா மாறுதலுக்கான காரணத்தைக் கேட்கவில்லை. ஏனென்றால் அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ப்ரோரோகேட்டிவ் ரைட் (Prorogative Right) அதிலே நான் போகவில்லை. சபை நடந்துக் கொண்டிருக் கிற பொழுது, அந்த நடவடிக்கை சபையின் நடவடிக்கையிலே சம்பந்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருப்பதால் இது நமக்குத் தேவையாக இருக்கிறது. அந்த இலாக்கா யாருக்கு என்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது, அந்த முடிவை எடுக்கிற போது நேரடியாக இங்கே சொல்லி இருக்கலாம். விதிகளில் என்ன இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சபை இல்லா விட்டால் நீங்கள் சொன்னமாதிரி அது ரொட்டீன் விஷயம்தான். ஆகவே சபை நடக்கிறபோது மாறுதலை இங்கே நேரடியாக தெரிவித்திருக்கவேண்டும் என்பது ஒன்று; இரண்டாவதாக இன்றைக்கு எடுக்கப்படவிருந்த கேள்விகள் எடுக்கமுடியாமல் இலாக்கா மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டி யிருந்தது. நான் மெரிட்ஸ்குள்ளே போகவில்லை. எந்த மாறு தலாக இருந்தாலும் சபையினுடைய நடவடிக்கையைப் பாதிக் காமல் செய்யலாம். அப்படி செய்திருந்தால் அந்த கேள்விகளும் இன்றைக்கு வந்திருக்கும். அவையின் நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய முறையில் அந்த நடவடிக்கை இருந்திருக்கக் கூடாது. தீஸ் ஆர் தி டூ பாயிண்ட்ஸ்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அமைச்சர்களை நியமிப்பதும், யாரிடத்திலே எந்தப் பொறுப்பைத் தருவது என்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தது ஆகும். அவர்கள் பரிந்துரையை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆணையிட்ட பிறகு, ''பை ஆர்டர் ஆப் தி கவர்னர்'' என்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லியமாதிரி ஆளுநர் அவர்கள் ஆணை வெளிவருகிறபோதே அது அறிவிப்பாக வெளி வந்து விடுகிறது. அதை சபைக்கு அறிவித்து விட்டுத்தான் வெளியே அறிவிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஆளுநர் அவர்களிடமிருந்து நோட்டி பிகேஷன் வந்துள்ளது. கேள்வி நேரம் முடிந்த பிறகு அதைப்பற்றி அவர்கள் அறிவிக்க இருந்தார்கள்.

THIRU R. UMANATH: Mr. Speaker Sir, the Hon. Chief Minister could have advised the Governor. The Governor acts only on the advice of the Hon. Chief Minister. ஆகவே, அந்த இலாகா மாற்றம் குறித்த ஸ்டேட்மெண்ட்டை அவை தற்போது நடப்பதாலே, அவைக்கு முதலில் அறிவிப்பு செய்துவிட்டு, பின்னர் வெளியே அறிக்கை விடலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கவர்னருக்கு அட்வைஸ் கொடுத்து இருக்கலாமே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அறிவிப்பைக் கொடுக்க முதல் வாய்ப்பு பேரவைத் தலைவருக்கு எப்போது ஏற்படுகிறதோ அப்போது அதை அவைக்கு அறிவிக்கிறார். அவை நடந்து கொண்டு இருப்பதால், அவைக்கு அறிவித்து விட்டுதான் வெளியே அறிவிக்கவேண்டும் என்ற நிலைமை கவர்னருக்கு இல்லை. வெளியிடப்படுகிற ஆணைகள்-பை ஆர்டர் ஆப் கவர்னர்-என்றுதான் வருகிறது. ஆகவே நேற்றைக்கே செய்திகள் வெளியே வந்து விட்டது. முதல் வாய்ப்பு தற்போதுதான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு கிடைத்து இருப்பதால், கேள்வி நேரம் முடிந்த பின் அறிவிப்பதாக இருந்தார்கள், அப்படி அறிவிக்கும் முன்பே அந்தப் பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிவிட்டார்கள். ஆகவே, இதிலே ஒன்றும் பிரச்னையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகளை ஒத்திவைக்கின்ற நேரத்திலேயே மாண்புமிகு அமைச்சர்களின் இலாகா மாற்றப்பட்டு இருப்பதால் அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்து இருக்கிறேன். மேலும் இது கொள்கைப் பிரச்சினை அல்ல. மாண்புமிகு முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல கவர்னர் ஆணைபிறப்பித்தவுடனே அது அறிவிப்பாக வெளிவந்து விடுகிறது. இந்த அவையில் அறிவிப்பு செய்யவேண்டும் என்கிற நிலைமைகள் வரவில்லை.

3. தகவல் கோரல்.

எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பெற்றது.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி அகில இந்திய அளவில் கோரிக்கை தினம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற முறையில் எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்த நேரத்தில், செங்கற்பட்டு மாவட்டம் புழல் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம், மாதவரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் அந்தக் கோரிக்கை தினத்திற்காக தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு இருந்த நேரத்தில், எதிர்க்கட்சிகளில் குறிப்பாக எங்களுடைய ஜனதா கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் திரு. கதிர்வேலு உட்பட, திராவிட முன்னேற்றக்கழகம், சி. பி. ஐ. போன்ற கட்சிகளின் தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னைகளை எல்லாம் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் குறிப்பிடலாம். ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்த பிறகு ஒத்திவைப்புத்